**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.1233/2021 இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1** -ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின் படி திருமதி. சண்முகப்பிரியா, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | K.K.ராம் பொன்சங்கர் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 25.08.2021ம் தேதியிட்ட பிரதிவாதியால் எனக்கு

கொடுக்கப்பட்ட ரூ.5,50,000/-க்கான தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, பெருந்துறை கிளையின் காசோலை எண்.242563ன் அசல் **வா.சா.ஆ.1.** 30.08.2021ம் தேதியிட்ட மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான திருப்புதல் குறிப்பாணை அசல்.**வா.சா.ஆ.2.** 23.10.2021ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் அஞ்சல் இரசீதுடன்.**வா.சா.ஆ.3.** 27.10.2021ம் தேதியிட்ட மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதியால் பெறப்பட்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை**வா.சா.ஆ.4.** 02.11.2021 ம் தேதியிட்ட பிரதிவாதியால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.5**ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வா.சா.1 - பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.